ஓம்

ஸ்ரீராம ஜெயம்



# திருமால் பெருமை

ஸ்ரீ

# மஹா விஷ்ணு ஸ்தோத்திரம்

1\. குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரும் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெரும்நிலம் அளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

2\. அண்டர்தம் துயரம் தீர அயோத்திமா நகரில்வந்து
தண்டகா ரண்ணியம் சென்று சமுத்திரமீ தணையைக் [கட்டி
கொண்டு ராவணனை மாட்ட கோதண்டம் கையி [லேந்தும்
புண்டரீகக் கண்ணன் ராமன் பொன்னடி கமலம் [போற்றி.

3\. திருவுக்கும் திருவாகிய செல்வா!
தெய்வத்துக்(கு) அரசே! செய்ய கண்ணா!
உருவச் செஞ்சுடர் ஆழி வல்லானே!
உலகு (உ)ண்ட ஒருவா! திருமார்பா!

ஒருவர்க்(கு) ஆற்றி உய்யும் வகை இன்றால்
உடன் நின்று ஐவர் என் உள்புகுந்(து) ஒழியா(து)
அருவித்தின் றிட அஞ்சி நின் அடைந்தேன்
அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானே!

4. ஊருநீ! பேருநீயும் என் அறிவும் நீ! எம்வுருவும் நீயும்
மாறு நீ! உயிர்களுக்கெல்லாம் படியளப்பவனும் நீயே!
தேருள தருளாலுந்தன் திருவடிதாட் கொள்ளும்
ஆருமற்றோர்க்கு நீயே எந்தன் அரங்கமா நகருளானே!

5. பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே யென்னும்
இச்சுவைத் தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!

6. மின்னுருவாய் மூன்றுருவில் வேதம் நான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்ததிங்கள் தானாய்
பின்னுருவாய் முன்னுருவில் பிணி மூப்பில்லாப்
பிறபிப்பிலியா யிறப்பதற்கே யெண்ணாது என்னும்
பொன்னுருவாய் மணியுருவில் பூத மைந்தாய்ப்
புனலுருவா யனலுருவில் திகழுஞ் சோதி
தன்னுருவா யென்னுருவில் நின்ற வேந்தை
தளிர்புரையும் திருவடியென் தலைமேலேயே.

7. அங்கணெடு மதிள்புடைசூ ழயோத்தி யென்னும்
அணி நகரத் துலகனைத்தும் விளக்கும் சோதி
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி
விண்முழுது மூய்யக்கொண்ட வீரன் தன்னை

செங்கணெடுங் கருமுகிலை யிராமன் றன்னைச்
தில்லைநகர்த் திருச்சித்திர கூடந் தன்னுள்
எங்கள்தனி முதல்வனையெம் பெருமான் றன்னை
யென்றுகொலோ கண்குளிரக் காணும் நாளே!

8. நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
ஜென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராம என்ற இரண்டு எழுத்தினால்.

ஸ்ரீ ராம் ஜெயராம் ஜெய ஜெய ராம் ஓம்......

## அர்ச்சனைக்குரிய நாமங்கள்

1. ஓம் விஷ்ணவே நம:
விஷ்ணு — எங்கும் வியாபித்திருப்பவர்

2. ஓம் நாராயணாய நம:
நாராயணன் — தன்னிடத்திருந்து தோன்றி
[வந்த உலகில் வீற்றிருப்பவன்

3. ஓம் வாஸுதேவாய நம:
வாசுதேவன் — எல்லா உயிர்கள் உள்ளத்திலும்
[வீற்றிருப்பவன்

4. ஓம் த்ருவாய நம:
த்ருவன் — அசையாதவன்

5. ஓம் அச்யுதாய நம:
அச்யுதன் — நெறிபிறழாதவன்

6. ஓம் ஹ்ருஷீ கேசாய நம:
ஹ்ருஷீகேசன் — இந்திரியங்களுக்கு அதிபதி

7. ஓம் புருஷோத்தமாய நம:
புருஷோத்தமன் — பெருமாள்

8. ஓம் லக்ஷ்மீபதயே நம:
லக்ஷ்மீபதி — திருமகளின் தலைவன்

9. ஓம் கோவிந்தாய நம:
கோவிந்தன் — ஜீவர்களின் நிலையை அறிபவன்

10. ஓம் சங்கசக்ரதராய நம:
சங்க சக்ரதரன் — சங்கையும் சக்கரத்தையும் [தரித்திருப்பவன்

11. ஓம் ஜகந்நாதாய நம:
ஜகந்நாதன் — உலகுக்குத் தலைவன்

12. ஓம் பரமாத்மனே நம:
பரமாத்மன் — பிரபஞ்சத்துக்கு அப்பால் [உள்ள ஆத்மன்

13. ஓம் யோகேச்வராய நம:
யோகேசுவரன் — யோகத்துக்குத் தலைவன்

14. ஓம் ஆதிதேவாய நம:
ஆதிதேவன் — முதல்வன்

15. ஓம் ஆதிமூலாய நம:
ஆதிமூலம் — அனைத்துக்கும் முதல் காரணம்

16. ஓம் த்ரிவிக்கிரமாய நம:
த்ரிவிக்கிரமன் — மூவடியால் உலகு அளந்தவன்

17. ஓம் ஜனார்த்தனாய நம:
ஜனார்த்தனன் — மக்களால் வணங்கப்படுபவன்

18. ஓம் பத்மநாபாய நம:
பத்ம நாபன் — தனது நாபியின்று உலகை உண்டு பண்ணியவன், மலர்மிசையேகியவன்

19. ஓம் கேசவாய நம:
கேசவன் — க - பிரம்மா, அ—விஷ்ணு, ஈச—
ருத்ரன் – மும்மூர்த்தி வடிவினன்

20. ஓம் ஹரயே நம:
ஹரி — பாவத்தைப் போக்குபவன்

21. ஓம் தர்மஸம்ஸ்தாபகாய நம:
தர்ம ஸம்ஸ்தாபகன் — தர்மத்தை நிலை
[நாட்டியவன்

22. ஓம் துஷ்டநிக்ரஹ காரிணே நம:
துஷ்டநிக்ரஹகாரி — கெட்டவர்களை
[அழிப்பவன்

23. ஓம் சிஷ்டரக்ஷகாய நம:
சிஷ்ட ரக்ஷகன் — நல்லாரைக் காப்பவன்

24. ஓம் க்ஷேத்ரபாலகாய நம:
க்ஷேத்ர பாலகன் — உடலைக் காப்பவன்

25. ஓம் ஸர்வதோ முகாய நம:
ஸர்வதோ முகன் — எங்கும் சான்னித்திய
[முடையவன்

26. ஓம் ஸத்யதர்ம பராயணாய நம:
ஸத்யதர்ம பராயணன் — சத்தியத்திலும் தர்
[மத்திலும் கண்ணாயிருப்பவன்

27. ஓம் மஹாயஜ்வனே நம:
மஹா யஜ்வன் — பெருவேள்வி வடிவினன்.

அரி
ஓம் நமோ
நாராயணாய நம:
## ஸ்ரீராம ஜெயம் ஹரி ஓம் தத்சத்

ஸ்ரீ ஆதித்யாயச சோமாய மங்களாய புதாயச
குரு சுக்ர சனிப்பயச்ச ராஹவே கேதவே நம:

என்ற நவரத்தினங்களான நாமங்களைத் தினமும் பக்தியோடு நினைவுகூரும் அன்பர்கட்கு வாழ்க்கையில் சகலவித துன்பங்களும் ஓடி மறைந்து எல்லா நலன்களும் கிட்டும் என்பது உறுதி

சுப மங்களம்!

### நினைவு கூரவேண்டியவை

1. சேவை செய், அன்புகொள், பிறருக்கு வழங்கு, தூய்மைப்படுத்து, தியானம்செய், இறையுணர்வு பெறு.

2. சிக்கல்கள் யாவும் வாழ்க்கைக்கும், சிந்தனைக்கும் சுவையூட்டுகின்றன. அவைகள் உன்வளமான வாழ்வுக்கு வழிகோலுகின்றன. நீதி, நேர்மை, அன்பு வழிகளில் பிரச்சனைகளைத் தீர்த்து வெற்றிகொள்!

3. பிரார்த்தனை செய். உளத்தே நினை. நாள்தோறும் இறைவனின் நாமங்களைச் சொல், அன்போடும், தெய்வீக உணர்வோடும், ஒரு நிலைப்பட்ட மனதுடனும் வேண்டு. தூய்மை, அறிவு, பக்தி ஆகியவற்றை அருளும்படி கடவுளை வேண்டு.

ஓம் சிவாய நம:, ஓம் உமாதேவ்யை நம:,
ஓம் கணபதயே நம:, ஓம் சரவணபவாய நம:,
ஓம் சிவசூர்யாய நம., ஓம் விஷ்ணவே நம:

என்றிவ்வாறெல்லாம் தித்திப்பான இறைவன் நாமங்களைத் தினமும் பன்முறை சொல்லியும் எழுதியும் (லிகித ஜெபம்) வருவாயாகில் சகல சௌபாக்கியங்களும் நிச்சயம் பெறுவாய் என்பதை நினைவு கூர்வாயாக!

## ஸ்ரீ வெங்கடேசர் பிரார்த்தனை

ஓம் ஸ்ரீகேசவனுக்கு நமஸ்காரம். ஜலதேவைகளாகிய நீங்கள் உயர்ந்த சுகத்துக்குக் காரணமாக இருக்கிறீர்கள் என்பது பிரசித்தம். அப்படிப்பட்ட நீங்கள் எங்களுக்கு மகிமை பொருந்தியதும் ரமணீயமானதுமான ஞானதிருஷ்டியின் பொருட்டுப் போசனையை அளியுங்கள். உங்களிடம் எந்தப்பரம மங்களமான பேரின்பரஸம் உள்ளதோ அதற்கு இங்கேயே எங்களை நீங்கள் அன்பு சுரக்கும் அன்னையைப் போல் உரியவர்களாக்குங்கள். எந்த ரஸத்தை நிலையாக வழங்கும் பொருட்டு நீங்கள் இன்பவடிவாய் விளங்குகிறீர்களோ அந்த ரசத்திற்காக உங்களை மிகவும் ஆர்வத்துடன் நாடுகின்றோம். ஜலதேவதைகளாகிய நீங்கள் எங்களை ஞானத்தால் புனிதமான புனர்ஜன்மமடைந்து விளங்கும்படி அருள்வீர்களாக!

ஸ்ரீ

# ஸத நாமாவளி ஸ்தோத்திரம்

ஓம் ஹரிஹரி
நரஹரி
முரஹரி
அம்புஜாக்ஷரி
அச்சுதா
உச்சிதா
பஞ்சாயுதா
பாண்டவர் தூதா
லக்ஷ்மீசமேதா
லீலாவிநோதா 10

கமலபாதா
ஆதிமத்தியாந்தரகிதா
அனாதரக்ஷகா
அகிலாண்டகோடி
பிரம்மாண்டநாயகா
பரமானந்தா
முகுந்தா
வைகுந்தா
கோவிந்தா
பச்சைவண்ணா 20
கார்வண்ணா

பன்னகசயனா
கமலக்கண்ணா
ஜனார்த்தனா
கருடவாஹனா
ராக்ஷஸமர்த்தனா
காளிங்கநிர்த்தனா
சேஷசயனா
நாராயணா
பிரம்மபாராயணா

வாமனா
நந்தநந்தனா
மதுசூதனா
பரிபூரணா
சர்வகாரணா
வேங்கடரமணா
சங்கடஹரணா
ஸ்ரீதரா
துளசிதரா
தாமோதரா

பீதாம்பரா
சீதாமனோஹரா
மச்ச கச்ச வராஹவதாரா
பலபத்ரா
பரமதயாபரா

பரமேசுவரா
சங்குசக்ரா
ஸர்வேஸ்வரா
கருணாகரா
ராதாமனோகரா
ஸ்ரீரங்கா
ஹரிரங்கா
பாண்டுரங்கா
லோகநாயகா
பத்மநாபா
திவ்யசொரூபா
புண்ணியபுருஷா
புருஷோத்தமா
ஸ்ரீராமா
ஹரிராமா
பரந்தாமா
நரசிம்மா
திரிவிக்ரமா
பரசுராமா
சஹஸ்திரநாமா
பக்தவத்ஸலா
பரமதயாளா
தேவரனுகூலா
ஆதிமூலா
ஸ்ரீலோலா

வேணுகோபாலா
மாதவா
யாதவா
ராகவா
கேசவா
வாசுதேவா
தேவதேவா
ஆதிதேவா
ஆபத்பாந்தவா
மஹானுபாவா 80
வசுதேவிதனயா
தசரததனயா
மாயாவிலாசா
வைகுண்டவாசா
சயம்பிரகாசா
வேங்கடேசா
ருஷீகேசா
சித்விலாசா
கஜபதி
ரகுபதி 90
சீதாபதி
வெங்கடாசலபதி
மாயா
ஆயா
வெண்ணெயுண்டநேயா

அண்டர்களேத்துந்தூயா
உலகமுண்டவாயா
நானாவுபாயா
பக்தர்கள்சகாயா
சதுர்ப்புஜா 100

கருடத்துவஜா
கோதண்ட ஹஸ்தா
புண்டரீகவரதா
ஓ! விஷ்ணு
ஓ! பராத்பரா
பரமதயாளா
ஓம் நாராயணா
நமோ நாராயணா 108

ஸ்ரீமந்நமோ நாராயணா
சரணம் ப்ரபத்யே
ஸ்ரீமதே நாராயணாய நம
கோவிந்த கோவிந்த
கோபால கோபால
ஓம் தேவர்க்கு முதல்வா
தசரத நந்தனா
கோதண்ட ஹஸ்தா
சோதிலா மெய்யா
வசிஷ்ட விஸ்வாசா
விஸ்வாமித்ர நேசா
தாடகையை அழித்தவா 120

அகலிகைக்கு அளித்தவா
ஜனகர் கண்ணாளா
சீதை மணவாளா
பரசுராம பங்கா
பசியமா வங்கா
தந்தைமொழிக் குகந்தவா
தாயுரைக்கு மகிழ்ந்தவா
மகுடம்புனைய மறுத்தவா
மரவுரிதரிக்கப் பொறுத்தவா
கோசலையுருக நைந்தவா

காந்தையுருக நொந்தவா
நல்லயோத்தியைக் கடந்தவா
லட்சுமணனோடு நடந்தவா
நடந்தறியாத நாராயணா
நற்குகன்போற்றும் பூரணா
விதிதுணையென்று விண்டவா
நதிகடந்தின்பங் கொண்டவா
பாதம்பணியும் முன்னவா
அயோத்திபோவெனச் சொன்னவா
அத்திரிபோற்ற மகிழ்ந்தவா

அகஸ்தியர்தம்மைப் புகழ்ந்தவா
காக்கையின்கண்ணைக் கழித்தவா
கவந்தனுயிரை யழித்தவா
கன்னியிச்சிக்கப் பழித்தவா
கரதூஷணர்களை யொழித்தவா

மாரீசனை கொன்றவா
ஜடாயுவைக்கண்டு மூர்ச்செறிந்தவா
ஜடாயுவாற் சகலமுமறிந்தவா
சவரியினெச்சிலைத் தின்றவா
சந்தோஷமொழிகளை புகன்றவா

அனுமான்மேற்களி கூர்ந்தவா
அரியகிஷ்கிந்தையிற் சேர்ந்தவா
மரங்களேழையும் துளைத்தவா
வாலிவிழஅம்பு எய்தவா
அனுமான்றனக்குரை விரித்தவா
அவனாலிலங்கையை எரித்தவா
விபீஷணன்றனக்கு அருள்செய்தவா
மேலாமருண்மழை மெய்தவா
அசுரர்மேல்அம்புகள் எய்தவா
அவுணர்சிரங்களைக் கொய்தவா

கும்பகர்ணனைக் கொன்றவா
கொடியமாபலங்களை வென்றவா
இலங்கைக்கிறைவனை தலை பத்துதிரசாய்த்தவா
விபீஷணற்கு மகுடமளித்தவா
அரிவையைக் கண்டவா
ஆநந்தங் கொண்டவா
அயோத்தியை யாண்டவா
அறநோன்பு பூண்டவா
பட்டாபிராமனாய் கண்டவா.

மங்களம் மங்களம்
ஜெய மங்களம் மங்களம்
அயோத்தியில் வாழும் ராகுராமருக்கும்
மாது சீதாதேவி மங்கை உமையவட்கும்
மங்களம்
திருப்பதியில் வாழும் வெங்கடேசருக்கும்
மாது அலுமேலு மங்கை உமையவட்கும்
மங்களம்
திருவள்ளூர் வாழும் வீரராகவர்க்கும்
மாது கனகவல்லி மங்கை உமையவட்கும்
மங்களம்
மங்களம் மங்களம்
ஜெய மங்களம்
காஞ்சீபுரியில் வாழும் வாதராஜருக்கும்
மாது பெருந்தேவி மங்கை உமையவட்கும்
மங்களம்
திருக்குழியில் வாழும் விஜயராகவர்க்கும்
மாது கர்ப்பகவல்லி மங்கை உமையவட்கும்
மங்களம்
துவாரகாபுரியில் வாழும் கிருஷ்ணனுக்கும்
மாது ருக்மணிதேவி மங்கை உமையவட்கும்
மங்களம் மங்களம்
ஜெய மங்களம்

ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸதநாமாவளி ஸ்தோத்திரம்
முற்றிற்று

ஸ்ரீ ராமச் சந்திராய நம:

# ஸ்ரீ ராமர் ஜாதகம்

ஸ்ரீ ★ ராம ★ ஜெயம் ★

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் புதன் | சூரியன் | 11 | கேது |
| 8 | ஸ்ரீ ராசிச் சக்கரம் | | லக்கினம் குரு சந்திரன் |
| செவ்வாய் | | | 2 |
| ராகு | 5 | சனி | 3 |

ஸ்ரீ ★ ராம ★ ஜெயம் ★

குரு-உச்சம்
சந்திரன்-ஆட்சி
சனி-உச்சம்
ராகு-நட்பு
செவ்வாய்-உச்சம்
சுக்கிரன்-உச்சம்
சூரியன்-உச்சம்
புதன்-நீசம்
கேது-நட்பு

''ஆயிடைப் பருவம் வந்(து) அடைந்த எல்லையின்
மாயிரு புவிமகள் மகிழ்வின் ஓங்கிட
வேய்புனர் பூசமும் விண்ணுவேர் புகழ்
தூய கர்க்கடகமும் எழுந்து துள்ளவே''

★

''ஓம் ஹிரீம் ஹிரீம் ஶ்ரீம் ஶ்ரீம் லக்ஷ்மீ வாசுதேவாய நம.''

★

என்னும் மூலமந்திரத்தைத் தினமும் காலை, மாலை ஜபம் செய்துவந்தால் எல்லாவித கஷ்டங்களும் நீங்கி சகல சௌபாக்கியங்களும் எளிதில் கிடைக்கும்.

இதனை செப்புத் தகட்டின் மேல் வரைந்தாகினும், அல்லது இதனையே படம்போட்டு ஒவ்வொருவரும் பூஜை அறையில் வைத்து தினமும் தூபதீபம் காட்டி ஆசாரமாக வழிபட்டு வந்தால் இஹபர சுகங்கள் யாவும் அடைவார்கள் என்பது திண்ணம்.

இத்துடன் வளர்பிறை ஏகாதசி விரத நன்னாளிலிருந்து தினமும் துளசி வழிபாடு செய்து வருவோருக்கும், எம்மைக் காக்கும் கடவுளாகிய திருமாலின் திவ்வியமானதும்; மிகச்சக்தி வாய்ந்ததுமான "ஸ்ரீ ராம ஜெயம்" என்ற மந்திரத்தை பக்தியோடு எழுதி வருவோருக்கும் எண்ணிய கருமங்கள் யாவும் எளிதில் இனிது நிறைவேறும்.

சுப மங்களம்!

ஸ்ரீநிவாசனின் பெருமைகளை எழுதுவோரும், எழுதச்செய்வோரும், படிப்போரும், பிரசாரம் செய்வோரும் அவருடைய அருட்கடாசத்துக்குப் பாத்திரமாவார் என்று சூதபுராணிகர் சொல்வதுபோல் இப்புத்தகத்தை படிக்கும் அன்பர்களின் இடர் நீங்கி மங்கள வாழ்வுபெற வாழ்த்துகிறோம்.

அன்பே நிறைக! அருளே பொலிக!

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

இந்நூல் அன்பளிப்பவர்கள்:

## ஸ்ரீ கண்ணன் ஸ்டோர்ஸ்

(தேங்காய், தேங்காய் எண்ணெ, பழைய பத்திரிகைகள், போத்தல்கள், சாக்குகள் முதலிய மொத்த விற்பனையாளர்.)

இலக்கம் 1546, கோட்டே வீதி

இராஜகிரியா.

இலங்கை.

குமரன் அச்சகம், 201, டாம் வீதி, கொழும்பு-12.